


**Revision Test Batch Strats On Coming Sunday (4/8/24)**
**For More Details : WHATSAPP - CLICK HERE**

# ஏழாம் வகுப்பு தமிழ் இயல் - 4

1.”வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி” இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ)முல்லைப்பாட்டு ஆ)பட்டினப்பாலை
இ)பெரும்பாணாற்றுப்படை ஈ)அகநானூறு

2.கடற்பயணம் சென்று கரை திரும்பத் தமிழர் கண்ட தொழில்நுட்பம்
அ)தோணி ஆ)படகு
இ)நங்கூரம் ஈ)கலங்கரை விளக்கம்

3.வள்ளலிடம் பரிசு பெற்ற ஒரு புலவர், பிற புலவருக்கு வழிகாட்டுவதாகப் பாடப்படுவது
அ)பிள்ளைத்தமிழ் இலக்கியம் ஆ)தூது இலக்கியம்
இ)பள்ளு இலக்கியம் ஈ)ஆற்றுப்படை இலக்கியம்

4.கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றிய நூல்கள் எத்தொகுப்பில் வைக்கப்பட்டுள்ளன?
அ)எட்டுத்தொகை
ஆ)பத்துப்பாட்டு
இ)பதினெண்கீழ்கணக்கு நூல்கள்
ஈ)இவையனைத்தும்

5.பொருத்துக.
மதலை – 1.கடல்
கரையும் - 2.தூண்
ஞெகிழி – 3.உச்சி
அழுவம் - 4.தீச்சுடர்
சென்னி – 5.அழைக்கும்
அ)2 5 4 1 3 ஆ)2 5 1 4 3
இ)5 2 1 3 4 ஈ)1 2 3 4 5

6. “ வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி” இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எதனை?
அ)கடல் ஆ)மரக்கலங்கள்
இ)மீனவர்கள் ஈ)கலங்கரை விளக்கம்

**Revision Test Batch Strats On Coming Sunday (4/8/24)**
**For More Details : WHATSAPP - CLICK HERE**

7.பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் யார்?
அ)அதிவீரராமபாண்டியர்
ஆ)மாந்தரஞ்சேரல் இரும்பொறை
இ)தொண்டைமான் இளந்திரையன்
ஈ)பன்னாடு தந்த மாறன் வழுதி

8.பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க
1.திருமுருகாற்றுப்படை 2.மதுரைக்காஞ்சி 3.நெடுநல்வாடை 4.மலைபடுகடாம் 5.பதிற்றுப்பத்து
அ)5 ஆ)4 இ)3 ஈ)1

9.பத்துப்பாட்டில் உள்ள ஆற்றுப்படை நூல்கள் மொத்தம் எத்தனை?
அ)ஆறு ஆ)ஐந்து
இ)ஏழு ஈ)நான்கு

10.பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை இவ்விரு நூல்களின் ஆசிரியர் யார்?
அ)மாங்குடி மருதனார் ஆ)கடியலூர் உருத்திரங்கண்ணனார்
இ)கபிலர் ஈ)அதிவீரராமபாண்டியன்

11.மோனை இடம் பெறாத இணையைத் தேர்வு செய்க.
அ)விரைசெலல் - வங்கூழ் ஆ)மாட – மருங்கு
இ)உலகு – உருகெழு ஈ)இரவும் - அசைவு

12.சரியான கூற்றுகள் எவை?
1.மருதன் இளநாகனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர்.
2.அகநானூற்றில் நெய்தல் திணையில் பாடல்களைப் பாடியுள்ளார்.
3.கலித்தொகையில் மருதத்திணையில் முப்பத்தைந்து பாடல்களையும் பாடியுள்ளார்.
4.மருதத்திணை பாடுவதில் இவர் வல்லவர் என்பதால் மருதன் எனும் பட்டம் பெற்றார்.
அ)அனைத்தும் சரி ஆ)1,2,3 மட்டும் சரி
இ)1,3,4 மட்டும் சரி ஈ)3,4 மட்டும் சரி

13. “உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்...” இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல்
அ)தொல்காப்பியம் ஆ)கலித்தொகை
இ)அகநானூறு ஈ)ஐங்குநூறு

14.அகன்துறை நீகான் - இத்தொடரில் நீகான் எனும் சொல் குறிப்பது
அ)கப்பல் ஆ)நாவாய் ஓட்டுபவன்

இ)கடல் ஈ)புலால்

15.தவறான சொற்பொருளைத் தேர்வு செய்க.
அ)உரு – அழகு ஆ)வங்கூழ் - கடல்
இ)வங்கம் - கப்பல் ஈ)எல் - பகல்

16.எட்டுத்தொகை நூல்களில் அகநூல்கள் மொத்தம் எத்தனை?
அ)ஐந்து ஆ)நான்கு
இ)மூன்று ஈ)இரண்டு

17.புலால் நாற்றம் உடையதாக அகநானூறு எதனைக் கூறுகிறது?
அ)காற்று ஆ)நாவாய்
இ)கடல் ஈ)கலங்கரை விளக்கம்

18.இன்று + ஆகி என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
அ)இன்றுஆகி ஆ)இன்றாகி
இ)இன்றியாகி ஈ)இன்றாஆகி

19.மாட ஒள்ளெரி என்பதன் பொருள் யாது?
அ)மாட விளக்கு ஆ)கலங்கரைவிளக்கம்
இ)நிலவொளி ஈ)கடல் அலைகள்

20.தொல்காப்பியம் ‘முந்நீர் வழக்கம்’ என்று எதனைக் கூறுகிறது?
அ)உணவுப்பழக்கம் ஆ)கடற்கரை வாழ்க்கை
இ)கடல் பயணம் ஈ)படகு பயணம்

21. “கடலோடா கால்வெல் நெடுந்தேர் கடலோடும்....” என்ற அடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
அ)பதிற்றுப்பத்து ஆ)தொல்காப்பியம்
இ)அகநானூறு ஈ)திருக்குறள்

22.எந்த துறைமுகத்திலிருந்து கப்பல்கள் மூலம் பொருள்கள் ஏற்றுமதியும் இறக்குமதியும் செய்யப்பட்டன என்பதைப் பட்டினப்பாலை விரிவாக விளக்குகிறது?
அ)கொற்கை ஆ)முசிறி
இ)தொண்டி ஈ)பூம்புகார்

23.சேந்தன் திவாகரம் என்பது
அ)பள்ளு நூல் ஆ)இலக்கண நூல்
இ)நிகண்டு நூல் ஈ)சிற்றிலக்கிய நூல்

24. ‘உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்’ இவ்வடியில் குறிப்பிடப்படுவது

அ)சிறிய கப்பல் ஆ)கடல்

இ)கலங்கரை விளக்கம் ஈ)பெரிய கப்பல்

25.எட்டுத்தொகை நூல்களுள் அகமும் புறமும் கலந்த நூல் எது?

அ)பதிற்றுப்பத்து ஆ)பரிபாடல்

இ)கலித்தொகை ஈ)நற்றிணை

26.பெரிய மரங்களின் உட்பகுதியை குடைந்து எடுத்து பயன்படுத்திய கப்பல் கலங்களை தமிழர்கள் எவ்வாறு அழைத்தனர்?

அ)கட்டுமரம் ஆ)தோணி

இ)படகு ஈ)கப்பல்

27.கீழ்க்கண்ட எந்த ஒன்று தமிழர்கள் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தியது இல்லை?

அ)படகு ஆ)தெப்பம்

இ)கலம் ஈ)மிதவை

28.தவறான கூற்றைத் தேர்வு செய்க.

1.பழங்காலத்தில் கப்பல் கட்டும் கலைஞர்கள் கம்மியர் என்று அழைக்கப்பட்டனர்.

2. “கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஉய்” என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

3.கப்பலின் நீர்மட்ட வைப்பிற்கு வேம்பு, இலுப்பை, புன்னை, நாவல் போன்ற மரங்களைப் பயன்படுத்தினர்.

4.கப்பலின் பக்கங்களுக்கு தேக்கு, வெண்தேக்கு மரங்களைப் பயன்படுத்தினர்.

5.மரத்தின் வெட்டப்பட்ட பகுதியின் நிறத்தைக் கொண்டு அதன் தன்மை அறிந்து கப்பல் கட்ட பயன்படுத்தினர்.

அ)இவற்றில் எதுவுமில்லை ஆ)இவையனைத்தும்

இ)1மட்டும் ஈ)2மட்டும்

29.பொருத்துக.

கண்ணடை – 1.படகின் முன்பக்கம்

கரிமுக அம்பி – 2.நீட்டலளவை

தச்சு முழம் - 3.மரஆணிகள்

தொகுதி – 4.இழைத்த மரஉருவங்கள்

அ)1 2 4 3 ஆ)3 4 2 1

இ)4 2 1 3 ஈ)4 1 2 3

30.பாய்மரக் கப்பல்களின் பாய், கயிறு ஆகியவற்றில் பழுது ஏற்படும் பொழுது அவற்றை மரப்பிசின் கொண்டு இணைத்த செய்தியைக் கூறும் நூல் எது?

அ)பரிபாடல் ஆ)மணிமேகலை
இ)பதிற்றுப்பத்து ஈ)புறப்பாடல்

31. “தமிழர்கள் கட்டிய கப்பல்களை ஐம்பது ஆண்டுகள் ஆனாலும் பழுது பார்க்க வேண்டிய அவசியமில்லை” என்று தமிழரின் கப்பல் கட்டும் கலையை வியந்து பாராட்டியவர்
அ)மார்கோபோலோ ஆ)வாக்கர்
இ)நுனிஸ் ஈ)யுவான் சுவாங்

32.கப்பலின் உறுப்புகள் குறித்த பழந்தமிழரின் கருத்துகளில் தவறான இணையைத் தேர்வு செய்க.
1.முதன்மை உறுப்பு – எரா
2.குறுக்கு மரம் - பருமல்
3.திசைகாட்டும் கருவி – சுக்கான்
4.மீகாமன் - கப்பல் செலுத்துபவர்
5.கப்பல் நிறுத்தம் - நங்கூரம்
அ)1 ஆ)2
இ)3,4 ஈ)இவற்றில் எதுவுமில்லை

33.சமுக்கு எனும் கருவியை கப்பல்களில் பயன்படுத்தியதாக கூறும் நூல் எது?
அ)சேந்தன் திவாகரம் ஆ)பரிபாடல்
இ)கப்பல் சாத்திரம் ஈ)புறப்பாடல்

34. “நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக” என்று காற்றின் திசையை அறிந்து கப்பல்களைச் செலுத்தும் முறையை தமிழர்கள் நன்கு அறிந்திருந்ததைப் பாடியவர்?
அ)காக்கைப்பாடினியார் ஆ)வெண்ணிக்குயத்தியார்
இ)பொன்முடியார் ஈ)ஔவையார்

35.”கலம் தந்த பொற்பரிசம்
கழித்தோணியால் கரை சேர்க்குந்து” என்ற அடிகள் இடம் பெற்றுள்ள நூல்
அ)புறநானூறு ஆ)அகநானூறு
இ)பரிபாடல் ஈ)புறப்பாடல்

36.இலக்கிய வகையில் சொற்கள் எத்தனை வகைப்படும்?
அ)ஐந்து ஆ)நான்கு
இ)ஆறு ஈ)மூன்று

37.பொருத்துக
பொன் - 1.உரி இயற்சொல்
வந்தான் -2.வினை இயற்சொல்
அவனால் - 3.பெயர் இயற்சொல்
மாநகர் -4.இடை இயற்சொல்
அ)3 2 4 1 ஆ)2 3 4 1
இ)1 2 4 3 ஈ)4 3 2 1

38.கற்றோருக்கு மட்டுமே விளங்குபவையாகவும் இலக்கியங்களில் பயின்று வருபவையாகவும் அமையும் சொற்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
அ)இயற்சொல் ஆ)திரிசொல்
இ)திசைச் சொல் ஈ)உரிச்சொல்

39.கீழ்க்கண்டவற்றுள் எது திரி சொல் அல்ல?
1.பயின்றான் 2.கூர் 3.பண்டிகை 4.மான 5.வங்கம்
அ)இவற்றில் எதுவுமில்லை ஆ)1
இ)3 ஈ)4

40.பலபொருள் குறித்த ஒரு திரிசொல்லுக்கான உதாரணம் எது?
அ)வங்கம் ஆ)அம்பி
இ)நாவாய் ஈ)இதழ்

41.வடமொழி தவிர பிற மொழிகளிலிருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
அ)இயற்சொல் ஆ)திரிசொல்
இ)திசை சொல் ஈ)வடசொல்

42.விஷம் என்பதை விடம் என்று தமிழில் வழங்குவதை எவ்வாறு அழைப்பர்?
அ)மரூஉ ஆ)தற்பவம்
இ)தற்சமம் ஈ)குழூஉக்குறி

43.பொருத்தமான தமிழ்ச்சொல்லைத் தேர்வு செய்க – Sailor
அ)நங்கூரம் ஆ)மாலுமி
இ)கப்பல்கட்டுபவர் ஈ)கப்பல்தளம்

44.தூண் எனும் பொருள் தரும் சொல் யாது?
அ)மதலை ஆ)ஞெகிழி
இ)சென்னி ஈ)ஏணி

45.பழங்காலத்தில் எந்த உயிரினத்தை வழிகாட்டிகளாக பயன்படுத்திக் கடல் பயணம் செய்திருக்கலாம் என்று அறியப்படுகிறது?
அ)மீன்கள் ஆ)சுறாக்கள்
இ)கடல்ஆமைகள் ஈ)முதலைகள்

46.அறிவியல் புனைகதைகளின் தலைமகன் என்று அழைக்கப்படுபவர் யார்?
அ)ஜேம்ஸ் வில்லியம் ஆ)ஷேக்ஸ்பியர்
இ)கலீல்கிப்ரான் ஈ)ஜூல்ஸ்வெர்ன்

47.ஜூல்ஸ் வெர்ன் எழுதிய படைப்புகளில் தவறான ஒன்றைத் தேர்வு செய்க.
1.எண்பது நாளில் உலகைச் சுற்றி 2.பூமியின் மையத்தை நோக்கி ஒரு பயணம்
3.ஆழ்கடலின் அடியில்
அ)1 ஆ)2
இ)3 ஈ)இவற்றில் எதுவுமில்லை

48.எந்த நாட்டைத் தவிர கேணி, பெற்றம் போன்ற சொற்களை திசைச்சொற்கள் என்றே வழங்கினர் நம் தமிழர்?
அ)பாண்டிய நாடு ஆ)சேர நாடு
இ)சோழநாடு ஈ)தொண்டைநாடு

49. “அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்
பெருங் கலி வங்கம்” என்ற அடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
அ)அகநானூறு ஆ)பதிற்றுப்பத்து
இ)திருக்குறள் ஈ)பட்டினப்பாலை

50.போழ என்ற சொல்லின் பொருள் யாது?
அ)அதைப்போன்று ஆ)ஆழமாக
இ)பறக்க ஈ)பிளக்க

**Revision Test Batch Strats On Coming Sunday (4/8/24)**
**For More Details : WHATSAPP - CLICK HERE**